விவசாயிகளினுடைய நிலைகளைப் பொறுத்தவரையிலும், பால் விலை கூடுதலாக வேண்டும் என்றும் கரும்புக்கு ரூ.2,000/-ம் அறிவித்தது அமல்படுத்தப்படவில்லை, இது ரூ.3,000/- ஆக உயர்த்தப்பட வேண்டுமென்றும், அதேபோல தேசிய வங்கிகளிலே இருக்கின்ற கடன்களை ஜப்தி என்ற முறையில் agents மூலமாக, அவர்கள் 10 பேர், 15 பேர் வந்து, அதிகாரிகள் இல்லாமலேயே எடுத்துச்செல்லுகிற நிலை தடுக்கப்பட வேண்டுமென்றும், டிராக்டர்களை அதேபோல புதிய மின் மோட்டார்கள் வழங்கப்படும் என்ற வாக்குறுதியைத் தந்து, பழைய மின் மோட்டார்களை எடுத்துச் செல்வதற்கு மின்சாரத் துறை முனைந்திருக்கிறது இதற்கு ஒரு தெளிவான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்பதை எல்லாம் வலியுறுத்துகின்ற வகையில் அவர்கள் மறியல் என்ற போராட்டத்தின் அடிப்படையில் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அந்தப் போராட்டம் நடத்துவதற்கு முன்னால், அரசு அதைக் கூர்ந்து கவனித்து, அவர்களுடைய கோரிக்கைகள் என்ன, அதிலே என்ன நியாயங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

முற்பகல் 10-50

(இ) பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்திலே ஆந்திர அரசு 200 கோடி ரூபாயிலே அணையைக் கட்ட முற்பட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதுசம்பந்தமாகக் கொடுத்திருக்கிறீர்கள். இது பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.